Arimaa Nokku

18 : 3 அக்டோபர் 2024

# அரிமா நோக்கு

ஆசிரியர்: ஈரோடு தமிழன்பன்



மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

INTERNATIONAL QUARTERLY ON LANGUAGE, LITERATURE, ART, CULTURE, HISTORY, PHILOSOPHY AND SCIENCE

பல்கலைக்கழக நல்கை ஆணையத்தின் ஏற்பினைப் பெற்ற ஆய்விதழ்

UGC - CARE LISTED AND PEER REVIEWED JOURNAL

ISSN 2320-4842

ISSN 2320-4842

# அரிமா நோக்கு

18:3 அக்டோபர் 2024

*ஆசிரியர்*

ஈரோடு தமிழன்பன்

*இணையாசிரியர்*

வ. ஜெயதேவன்

*ஆசிரியர் குழு*

நா. கணேசன் (அமெரிக்கா)

நா. சுப்பிரமணியன் (கனடா)

பொன். செல்வகணபதி

ஒப்பிலா மதிவாணன்

சீதாலட்சுமி (சிங்கப்பூர்)

மு. பரமசிவம் (மலேசியா)

பத்மாவதி விவேகானந்தன்

இரா. பிரேமா

பா. இரவிக்குமார்

மருதூர் அரங்கராசன்

பெ. இலக்குமிநாராயணன்

*அறிவுரைக் குழு*

இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்

*பதிப்பாளர்*

இரா. பன்னிருகைவடிவேலன்

259 நேரு நகர், 2ஆவது முதன்மைச் சாலை, பழைய மகாபலிபுரம் சாலை, கொட்டிவாக்கம், சென்னை 600 096

arimaanokkuu@gmail.com

+91 91766 30415

| | |
|---|---|
| பைந்தமிழ் பழகுவோம்... முனைவர் ச. திருநாவுக்கரசு | 05 |
| வலசை - புதினத்தில் கானுயிர் சார்ந்த சூழலியல் பதிவுகள் ப. நவசக்திவேல் | 09 |
| அகநானூற்றில் இனக்குழுச் சமுதாயம் மானுடவியல் நோக்கில் - க.சங்கீதா | 13 |
| இடுக்கி மாவட்ட மலைப்புலையர் மக்களின் சடங்கு முறைகள் - முனைவர் பெ. சசிக்குமார் | 17 |
| இரவுச்சுடர் - பெண்படைப்பாளியின் படைப்பில் பெண்ணியம் முனைவர் கோ. மலர்விழி | 21 |
| கவிஞர் குட்டி ரேவதி கவிதைகளில் உடலரசியல் ந. ஸ்டாலின் | 25 |
| அற இலக்கியங்களில் உயிர்க்கொல்லாமை முனைவர் த. லதா | 28 |
| சங்க அகமாந்தர் வாழ்வியலில் தொல்காப்பியம் கூறும் களவுக்கால மெய்ப்பாடு - ந. அரவிந்த்குமார் | 31 |
| சங்க இலக்கியங்களில் பெண் மொழியும் புனைவும் முனைவர் ந. ரேவதி | 36 |
| சங்க இலக்கியத்தில் தலைவியின் வாழ்வும் மொழியும் ஆ. தீபா | 39 |
| சங்க இலக்கியங்களில் வேளாண்மை முனைவர் ஆ. பரிமளா | 44 |
| பெண்மொழி இயங்கியல் முனைவர் பி. அனுராதா | 49 |
| நால்வகை நெறிகளும் தனி மனித ஒழுக்கமும் முனைவர் க. நாகரத்தினம் | 55 |
| நீதி இலக்கியங்களில் நிலையாமைக் கோட்பாடு ஈ. சௌந்தர்யா | 60 |
| பண்டைத் தமிழர்களின் சமய வாழ்வு முனைவர் ந. பிரகாஷ் | 65 |
| பண்டையத் தமிழரின் பண்பாட்டுக் கூறுகள் பொ. அகத்திய பாலா | 70 |
| புதினங்கள் புலப்படுத்தும் நீர் வளம் - அழிவுப் பாதையை நோக்கி - முனைவர் மு. அஜீத் குமார் | 73 |
| புறநானூற்றில் தமிழர் பண்பாடு திருமதி கா. சுகன்யா | 80 |
| பெரியபுராணம் காட்டும் மகளிர் நிலை பா. தன்ராஜ் | 83 |
| மனானியங்கள் புதினத்தில் இசுலாமிய பெண்களின் நிலை முனைவர் ஈ. யுவராணி | 87 |
| மீமெய்ம்மையியல் (surrealism) நோக்கில் குறுந்தொகை முனைவர் கி. ராம்கணேஷ் | 91 |
| மெய்கீர்த்திகளின் வழி சோழர்களின் ஆட்சிமுறை, இயற்கைவளம், வேளாண்மை - தே. ராஜகுமார் | 95 |
| மோது.. முன்னேறு.. கவிதைகளில் வெற்றிச் சிந்தனைகள் கா. செய்யது அகமது கபீர் | 100 |
| வாய்மொழி மரபில் மகாபாரதப் பிரசங்க மரபு முனைவர் மு. ஏழுமலை | 103 |

ISSN 2320-4842

# பண்டைத் தமிழர்களின் சமய வாழ்வு

முனைவர் ந. பிரகாஷ்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி
பொள்ளாச்சி - 642 001

இன்றைய உலகில் பெரும்பாலான மக்கள் தெய்வநம்பிக்கை உடையவர்களாக இருந்து வருகின்றனர். தெய்வநம்பிக்கை அல்லது தெய்வ உணர்வு தெய்வவழிபாடு ஆகியவையும் இவ்விரண்டின் காரணமாகக் கடைபிடிக்கப்படுகிற ஆன்மீகக் கொள்கைகளும் இணைந்து உலகத்தில் பல்வேறு மதங்கள் தோன்றியுள்ளன.

காட்சிக்கும் கருத்துக்கும் வருகிற பொருள்களைப் பற்றி ஆராயவும், அந்த ஆய்வின் விளைவாகத் தக்க முடிவு எடுக்கவும், எடுத்த முடிவின் துணைக்கொண்டு வாழ்வின் பல்வேறு நிலைகளில் ஒழுங்காக நிற்கவும் உள்ள வாய்ப்பு மனிதனுக்கு மட்டும்தான் கிடைத்திருக்கிறது. அந்த வாய்ப்பினை ஏற்ற முறையில் பயன்படுத்தி நலமும் இன்பமும் பெற முயற்சிப்பவன் மனிதன்.

மிகத் தொடக்ககாலத்தில் இயற்கை மனிதனுக்கு ஒரு புதிராகத் தோற்றமளித்தது. இருள், சூரியன், பாம்பு ஆகிய இயற்கைப் பொருள்கள் மனிதனுக்குப் புதிராக இருந்தன. அதே நேரத்தில் அச்சத்தையும் ஊட்டின. ஆயினும் மனிதன் இயற்கையே தனக்கு உணவை அளிக்கிறது என்று அறிந்து கொண்டான். அச்சமும் உணவுத்தேவையும் கொண்ட மனிதன் இயற்கையின் பேராற்றலை வணங்கத் தலைப்பட்டான். கூட்டு உழைப்பினால் உணவைத் தேட மனிதன் முற்பட்டபோது ஆற்றல் மிகுந்த இயற்கையைத் தனக்கு இணங்க வைக்க முயன்றான். பழங்குடி மக்களின் பாட்டும்ஆட்டமும் அவர்களுடைய உணவுத் தேவையோடு தொடர்புடையவை. வேட்டை விலங்குகள் நிறைய கிடைப்பதற்காகவும், பின் உணவுக்குரிய பயிர்கள் நிறைய விளைவதற்காகவும், அதற்கான மழை பெய்வதற்காகவும், இயற்கையை அவர்கள் வேண்டினர். அதற்காக பயிர்கள் விளைவது போன்றும், மழை பெய்வது போன்றும் ஆடிக் காட்டினர். இவ்வாறு "போலச்செய்து காட்டுவதன்" மூலம் இயற்கையை இணங்க வைக்க முடியும் என்று நம்பினர். இவ்வகையான ஆட்டமும் பாட்டமும் மந்திரச் சடங்குகளோடு தொடர்புடையன. மந்திரமே உலக நாகரிகத்தில் தொடக்க காலத்தில் கலைகளுக்கும் விஞ்ஞானத்திற்கும் மூலமாக இருந்தது என்பதைச் சமூகவியல் அறிஞர்கள் பிரேசர், ஜார்ஜ்தாம்சன் போன்றோர் விரிவாக விளக்கிக் காட்டி உள்ளனர்.

உயிரினங்களிலேயே மனிதன் கூடிவாழுகின்ற விலங்கினத்தைச் சேர்ந்தவன். விலங்கு நிலையில் இருந்த போது யானை, மான், எறும்பு போல மனிதன் கூட்டம் கூட்டமாகவே வாழ்ந்த உயிரி. மனிதனின் தொடக்ககால நாகரிகமான கற்கால நாகரிகத்திலும் மனிதன் மந்தை மந்தையாகவே அலைந்து திரிந்தான்.

புதைபொருள் ஆய்வுகளில் கண்டுபிடிக்கப்படும் கற்கருவிகள் தொகுதி தொகுதியாகவே இன்றும் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. (மனிதன் மந்தை உணர்ச்சி உடையவன் என்பதால் தான் இன்றும் தனிமை மனிதனுக்கு அச்சத்தையும் வக்கிர உணர்வையும் ஊட்டுகிறது) மனித சமூகத்தின் வளர்ச்சி என்பது அதனுடைய கூட்டுச் சிந்தனையின் விளைவு ஆகும்.

தெய்வங்களின் வடிவமும் குணமும் அவை சார்ந்த சமூகத்தின் தேவைகளையொட்டி அமைந்தவையாம். கால்நடை வளர்ப்போரின் தெய்வம் மாடுகள், கன்றுகள் சூழ்ந்தபடி கையில் புல்லாங்குழலுடன் தான் இருக்க முடியும். உழவர்களின் தெய்வம் மழை தருகின்ற இந்திரனாகவோ, கையில் கலப்பை ஏந்திய பலராமனாகவோ தான் இருக்க முடியும்.

ISSN 2320-4842

...சொன்னால், ஒரு குறிப்பிட்ட ... என்ன வகையான உற்பத்தி முறையினைச் சார்ந்திருக்கிறதோ அதைப் பொறுத்து அத்தெய்வங்களின் வடிவங்களும் ... அத்தெய்வத்தைப் பற்றிய ... நம்பிக்கைகளும் அமையும்.

... கிராமப்புறத் தேவதைகள் எல்லாம் கையிலே காவலுக்குரிய ஆயுதங்களையே ஏந்தியிருக்கின்றனவே ஏன்? பயிரை ... கண்மாயிலிருந்து பாய்கின்ற ... காத்தல், விளைந்தபயிரைப் பகைவரிட ... காத்தல், அறுவடை செய்த தானியங் ... காத்தல், ஊர்எல்லையில் நின்று எதிரிகளிடமிருந்து ஊரைக்காத்தல் இந்தக் காப்பு நடவடிக்கைகள் தாம் நேற்று வரை கிராமப்பொருளாதாரத்தின் அடிப்படை. எனவே இந்த மக்களின் தெய்வங்களெல் லாம் இந்த மக்களைப்போலவே ஏதேனும் ஓர் ஆயுதம் ஏந்தி காவலுக்குரிய வயல்களின் ஓரத்திலும், கண்மாய்க் கரையிலும், ஊர் மந்தையிலும், ஊர்எல்லையிலும் அயராது கண்விழித்து நிற்கின்றன. இவை உட்காருவ தும் கண் மூடுவதும் கிடையாது. இந்த மக்களைப் போலவே இத்தெய்வங்களும் முறுக்கிய மீசையும் வரிந்து கட்டிய வேட்டியு மாகச் சட்டையில்லாமல் (சிலநேரங்களில் தலைப்பாகையுடன்) கள்ளும் கறியும் உண்ப வையாக வாழ்கின்றன.

## தாய்த் தெய்வம்

தமிழ்நாட்டில் நூற்றுக்கணக்கான மண் கோட்டைகள் இருந்து அழிந்திருக்கின்றன. இவை பெரும்பாலும் இரண்டு முதல் ஐந்து ஏக்கர் பரப்பளவிற்கு உள்ளாகவே அமைந்தி ருக்கின்றன. இன்று கோட்டைகள் இருந்ததற் கான அடையாளங்கள் மட்டும் பெரும் பாலான ஊர்களில் எஞ்சியிருக்கின்றன. இக்கோயில்கள் பெரும்பாலும் செல்லியம் மன், காளியம்மன், செல்லாத்தம்மன், வடக்கு வாச்செல்லி (வடக்குவாசல் செல்வி) என்னும் பெயர்களில் அமைந்துள்ளன.

பழந்தமிழர்களின் தாய்த்தெய்வக் கோயில் களான அம்மன்கோயில்கள் 99 விழுக்காடு வடக்கு நோக்கியே அமைந்துள்ளன என்ப தையும் நாம் இங்கு நினைவில் கொள்ள வேண்டும். கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத் தில் முப்புறமும் கடல் சூழ்ந்த நாடாகவே (அதாவது இன்றைய கேரளத்தை உள்ளிட்டு) தமிழகம் இருந்துள்ளது. எனவே பகைப்படை வட திசையிலிருந்து மட்டுமே வர முடியும். தெய்வம் வடக்குதிசை நோக்கி தன் மக்களைக் காக்க ஆயுதம் ஏந்தி நிற்கின்றது என்பதே தொல் வரலாற்று உண்மையாகும். பழந்தமிழர்களின் தாய்த் தெய்வம் அரசுகள் உருவானபோது போர்த் தெய்வமாக மாற்றப் பட்டு கொற்றவை என்ற பெயரோடு வழங்கப்பட்டது. இப்பெயருக்கான வேர்ச் சொல் கொல் என்பதாகும். பெருந்தெய்வக் கோயில்களில் ஆண் தெய்வத்திற்கு அருகில் நின்று கொண்டு அல்லது அமர்ந்து கொண் டிருக்கும் உமை, திருமகள் ஆகிய தெய்வப் படிமங்களின் கையில் நீலம், தாமரை ஆகிய மலர்களே காட்டப்பட்டிருக்கும். ஆனால், தாய்த்தெய்வங்களோ பெரும்பாலும் சிங்கத் தின் மீது அமர்ந்த கோலத்தில், நான்கு அல்லது எட்டுகைகளுடன், எல்லாக் கைகளி லும் ஆயுதங்கள் ஏந்தியபடி போருக்கு ஆயத்தமான நிலையில் உள்ளன. இவை இரத்தப் பலி பெறுகின்ற தெய்வங்களாகும். எனவே இவற்றின் பூசாரிகளாகப் பண்டா ரம், வேளாளர், உச்சவர் போன்ற பார்ப்பன ரல்லாத சாதியினரே உள்ளனர்.

தமிழ்நாட்டுத் தாய்த்தெய்வம் பற்றிய குறிப்புகள் பெரும்பாலும் இலக்கியங்களில் இருந்து தான் நமக்குக் கிடைக்கின்றன. சங்க இலக்கியங்களும் பிற்கால இலக்கியங்களும் தரும் குறிப்புகளின் படி, குழந்தை பெற்றதா யினை குறிக்கும் சொல்லாகச் “செல்வி” என்ற சொல்லே காணப்படுகின்றது. “காடு கெழுசெல்வி, கடல்கெழு செல்வி” ஆகிய தொடர்களால் தாய்த்தெய்வம் சுட்டப் படுகின்றது. பிற்காலத்தில் வந்த அம்மன் என்ற சொல்லைப் போல “செல்வி” என்ற சொல் முற்காலத்தில் பயன்படுத்தப் பெற்று ள்ளது. “அம்மன்” என்ற சொல்லுக்கு “சீமாட்டி” அல்லது “உயர்குடிப்பெண்” என்பது பொருளாகும். அக்காலத்தில் தாய்த் தெய்வம் இப்போது போல ஊரின் நடுவில் இருக்கவில்லை. அதன் வாழிடம் காட்டுக் குள் இருந்தது. தாய்த்தெய்வத்தின் வழி பாட்டில் “துணங்கைக்கூத்து” நடைபெறும் இந்த முற்குறிப்புகளோடு பின்வந்த திரு முருகாற்றுப்படை அவளுக்குப் “பழையோள் ” (பழையவள்) என்ற பெயரையும் கொடுத்து முருகனை அவள் மகனாகவும் ஆக்கி வைக்கின்றது. சிலப்பதிகாரம் பிறந்த காலத் தில் அவள் தந்தைத் தெய்வத்தின் (சிவனின்) மனைவி ஆக்கப்படுகிறாள். அதன் பின்னர்,

ISSN 2320-4842

கிழக்கிந்தியப் பகுதியில் இருந்து வந்த காளி வழிபாடும், அது குறித்த கதைகளும் பழைய தாய்த்தெய்வ வழிபாட்டோடு இணைக்கப் பட்டன. இந்த இணைப்பு வைதீக மதத்தின் எழுச்சியால் உருவானதாகும். வைதீகம் முழுமையாகத் தமிழ்நாட்டில் வெற்றி பெற்ற போது தாய்த்தெய்வம் சிவனின் மனைவியா கவும் திருமாலின் தங்கையாகவும் ஆக்கப் பட்டாள். அவளுடைய தோற்றக்கூறுகளை அடையாளம் காட்டும் தனித்தன்மைகள் ஓரளவு மறைக்கப்பட்டது. அவள் குடும்ப அமைப்பின் அச்சாணியாக மாற்றப் பட்டாள்.

இருந்த போதும் வைதீகத்தின் முயற்சிகளால் தாய்த் தெய்வத்தின் தனித்தன்மையை “முற்றிலுமாக” அழித்து விட முடியவில்லை. சிவன், திருமால் ஆகிய பெருந்தெய்வக் கோயில்களில் அம்மன், தாயார் ஆகிய பெயர்களில் தாய்த்தெய்வம் குடியமர்த்தப் பட்டுள்ளது. இருந்த போதிலும் ஆண் துணையின்றி தனியாக தாய்த்தெய்வம் அமர்ந்துள்ள கோயில்களே தமிழ்நாட்டில் இன்றும் அதிகம் காணப்படுகின்றன.

## நடுகல் வணக்கமும் வழிபாடும்

பண்டைத் தமிழ்மக்களிடம் வேரூன்றியிருந்த வழிபாடுகளில் மிகவும் குறிப்பிடத்தக்கது இறந்தார்க்கு நடப்பட்ட கற்களை வணங்கும் நெறியாகும். போரில் இறந்துபட்ட வீரர் களின் நினைவினைப் போற்றும் வண்ணம் அவர்களின் பெயரையும், பெற்ற வெற்றியை யும், அவர்களின் பெருமைகளையும் பொறித்துக் கல் நட்டு வணங்கும் மரபு தொல்காப்பியர் காலத்திற்கும் முன்பே இருந்துள்ளது. வெட்சித்திணையின் ஒரு கூறாக இதனை அவர் குறித்துள்ளார். காட்சி, கால்கோள், நீர் படை, நடுகல், பெரும்படை, வாழ்த்து என்று ஆறு நிலைகளை அவர் குறித்துள்ளமை காண லாம். இதனையொட்டியே சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள் தமது வஞ்சிக் காண்டத்தை உருவாக்கியுள்ளமை கருதத் தக்கதாகும். இறந்தார்க்குக் கல் நட்டு வழிபடும் முறை கிபி 11ஆம் நூற்றாண்டு வரை இருந்துள்ளது என அறிஞர்கள் கண்டுள்ளனர்.

சங்கச்செய்யுட்களில் காணப்படும் நடுகல் பற்றிய குறிப்புகளில் பல வெட்சித் திணையுடன் தொடர்புடையனவாகவே உள்ளன. ஆநிரை மீட்டு அம்முயற்சியில் உயிர் துறந்த வீரர்களே பாராட்டப் பட்டுள்ளனர். ஆக்கள் நாட்டின் பொருளா தாரத்தில் பெற்றிருந்த சிறப்பிடத்தையே இது குறித்தது எனலாம். நாட்டின் பொருளா தாரத்திற்குப் பகைவரால் ஏற்பட்ட தீங்கிலி ருந்து காப்பாற்றுவதற்கு உயிர்விட்ட வீரர் களைப் போற்றியது வியப்புக்குரிய செய்தி யன்று. நடுகற்கள் ஊருக்குப் புறத்தே தொலைவில் இருந்த திடல்களில் நடப் பட்டன. ஓங்கி வளர்ந்த வேங்கையின் மலர்களை வெள்ளியப் பனந் தோட்டோடு விரவித் தொடுத்து மாலையாகச் சூட்டிக் கோவலர் ஒரு வீரனுக்குக் கல் நட்டதைப் புறநானூற்றுப் பாடலொன்று,

**ஊர் நனி இறந்த பார் முதிர் பறந்தலை**
**ஓங்கி நிலை வேங்கை ஒன் இணர் நறுவீப்**
**போந்தை அம் தோட்டின் புனைந்தனர்**
**தொடுத்து**
**பல் ஆன் கோவலர் படலை சூட்ட**
**கல் ஆயினையே - கடுமான் தோன்றல்”**

புறம் 265

இக்கற்களில் வீரனுடைய பெயரும் பீடும் எழுதப்பட்டன. அணிமயிற் பீலியும் மலர் மாலைகளும் சூட்டப்பட்டன என அறிய முடிகிறது.

**நல் அமர்க் கடந்த நாணுடை மறவர்**
**பெயரும் பீடும் எழுதி அதர் தொறும்**
**பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல்**

அகம் 67

**விழுத் தொடை மறவர் வில்லிடத்**
**தொலைந்தோர்**
**எழுத்துடை நடுகல் அன்ன விழுப் பிணர்ப்.**

ஐங் 352

**பரலுடை மருங்கின் பதுக்கை சேர்த்தி**
**மரல் வகுத்து தொடுத்த செம்பூங்**
**கண்ணியொடு**
**அணி மயிற் பீலி சூட்டி பெயர் பொறித்து**
**இனி நட்டனரே, கல்லும்** புறம் 264

என்னும் சான்றுகளால் இதனை அறியலாம். நடுகற்கள் அமைந்த இடத்தைச் சுற்றி வேலை நட்டுக் கேடயங்களையும் நிறுத்தி வைத்தனர் என்பதனை.

**கிடுகு நிரைத்து எஃகூன்றி**
**நடுக்கல்லின் அரண் போல** பட்-78

என்ற குறிப்பாலும்

**பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல்**
**வேல் ஊன்று பலகை வேற்றுமுனை**

ISSN 2320-4842

கடுக்கும் -அகம் 131

இருந்தைய நடுகற்கள் வரிசை வரிசையாக அம் மிகப் பலவாகவும் சில இடங்களில் காணப்பட்டன என்பதனை,

வில் ஈண்டு அருஞ்சமம் ததைய நூறி
நல்இசை நிறுத்த நாணுடை மறவர்
நிரைநிலை நடுகல் பொருந்தி -அகம் 387

நடுகற்களின் மேல் துணியினால் பந்தலிடுவதும் வழக்கமாக இருந்தது என்றும், இது அவ்வீரரின் மீது கொண்ட அன்பின் வெளிப்பாடாகவும், பாசத்தின் மிகுதியாலும்

"உயர் இசை வெறுப்பத் தோன்றிய பெயரை
மடம் சால் மஞ்ஞை அணி மயிர் சூட்டி
இடம் பிறர் கொள்ளாச் சிறுவழி
படம் செய் பந்தர்க் கல் மிசையதுவே" -
புறம் 260

என்பதனை மேற்கண்டப் புறப்பாடலின் வழியே அறியலாம்.

வீரர்களின் நடுக்கற்களைச் சுற்றி வில்லும் அம்பும் கேடயமும் நடப்பட்டு பாதுகாக்கப் பட்டன. இது அவ்வீரனின் மறத்தின் அடையாளமாகக் காட்டப்பட்டது. மேலும் அவரின் நடுகற்களின் மீது பனையோலைக் கூரையமைத்தும் பாதுகாத்தனர். இது அவ்வீரர்களின் மீது கொண்ட பக்தியும் அன்பின் வெளிப்பாடே ஆகும். இவையே நாளடைவில் கோயில்கள் மிகப்பெரிய கட்டுமானங்களாக உருப்பெறுவதற்கு அடித் தளமாக அமைந்தன.

## பலியும் வழிபாடும்

நடுகற்களையே தெய்வமாக வழிபட்டு நாள் தோறும் உயிர்ப்பலியிடுதல் அன்றைய மரபாயிருந்துள்ளது

பெயர் மருங் கறியார் கல்லெறிந்து
எழுதிய நல்லரை மரா அத்த கடவுள்
-மலைபடு 394

என்று கூறுவதன் மூலம் கற்கள் கடவுளாகவே கருதப்பட்டமை தெளிவாகின்றது. கற்களிலுறையும் தெய்வத்திற்கு வழிபாடு இயற்றுகையில் துடிகள் முழங்குவதும் உண்டு தோப்பிக் கள்ளையும் பலியாக வழங்குவர் என்பதையும் அறிய முடிகிறது.

"நடுகல் பீலி சூட்டி, துடிப்படுத்து
தோப்பிக் கள்ளொடு துரூஉப்
பலிகொடுக்கும்" - அகம் 35

சிற்றூர்வாழ் மக்கள் தம்மூர்ப் புறத்தே இருந்த நடுகற்களை நீராட்டினர். நெய்நறைக் கொளுவினர். தூபமெடுத்தனர். அதன் புகை தெருக்களில் கமழ்ந்தது என்றும்

இல்அடு கள்ளின் சில்குடிச் சீறூர்ப்
புடை நடு கல்லின் நாட்பலி ஊட்டி
நல்நீராட்டி நெய்ந்நறைக் கொளீஇய
மங்குல் மாப்புகை மறுகுடன் கமழும்
அருமுனை இருக்கைத்து ஆயினும்-புறம் 329

மறக்குடிப் பிறந்த மக்கள் நெல்லை உகுத்துப் பரவும் கல்லைத் தொழுவதின்றி வேறு தெய்வத்தினை வணங்காத இயல்புடையோராவர் என்பதை,

ஒன்னாத் தெவ்வர் முன்நின்று விலங்கி,
ஒளிறு ஏந்து மருப்பின் களிறு எறிந்து
வீழ்ந்ததென
கல்லே பரவின் அல்லது
நெல் உகுத்துப் பரவும் கடவுளும் இலவே
-புறம் 335

என்று மேற்கண்ட புறப்பாடலின் மூலம் காண முடிகின்றது.

ஒரு வீரனுடைய மனைவி தன்கணவன் நல்ல பகையைப் பெறவும் தனக்கு நல்ல விருந்தினர் வரவும் வேண்டி நடுகல்லைப் பரவியதாகவும் புறப்பாடல் கூறுகிறது. தற்பொழுது தமிழ்நாட்டு மக்களால் வணங்கப்பெறும் பல வீரத் தெய்வங்கள் யாவும் நடுகல் வழிபாட்டிலிருந்து தோன்றியவை சாம்பன், இருளன், சன்னாசி, மதுரை வீரன், அண்ணன்மார், சங்கிலிகருப்பு, கருப்பனார், வீரமாத்தி, அப்பிச்சிமார், நாட்டுராயன், கருப்பராயன் போன்ற வழித்துணைக் காவல் தெய்வங்கள் இவ்வகையினவாகும்.

தமிழர்களின் தொன்மையான வழிபாட்டு மரபுகளில் ஆகம விதிகளும் வேத மந்திரங் களும் வேள்விகளும் ஒருபோதும் கிடையாது. மேலும் தமிழர்களின் பண்பாட்டுத் தெய்வங் களுக்கு சைவப்பொருட்கள் படையல் என்பதும் அறவே இல்லை. நெய்வேத்தியமும் அன்று. இவையாவும் ஆரியர்களின் வருகைக்குப் பின்னரே நம் மக்களின் மீது பார்ப்பனர்களால் திணிக்கப்பட்ட வழி பாட்டுச் சிதைவு முறையே ஆகும்.

## வெறியாட்டு

பண்டைத்தமிழர்களின் வழிபாட்டு முறையில் மிகவும் தொன்மையானது வெறியாட்டு நிகழ்வாகும். மனிதர் மேல் தெய்வம் ஏறி

ISSN 2320-4842

வருவதுண்டு என்ற நம்பிக்கையில் இருந்து உருவானதே இது எனலாம். ஆவேசம் என்றும் இதனை கூறுவர். இன்றளவும் பல கோயில் பூசாரிகள் சாமியாடி வருவதையும் அவர்கள் குறி சொல்லி வருதலையும் காணலாம். சங்ககாலத்தில் முருகனோடு தொடர்புடையதாக இவ்வெறியாடல் நிகழ்வு நிகழ்ந்தது. முருகனுக்குரிய வேலினைக் கையில் ஏந்தி ஆடியோன் வேலன் எனப் பட்டான்.

தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே வெறியாட்டு நிகழ்வுப் பெருவழக்காக இருந்துள்ளது.

**வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்**
**வெறியாட் டயர்ந்த காந்தருளும்**

-தொல்.பொருள் 60

இடுக்கண் யாவற்றிற்கும் முருகனே காரணம் என்று கூறுவது வேலனுடைய இயல்பு. மகளின் மெலிவுக்குக் காரணம் யாதென அறிய விரும்பிய தாய் ஊர் வேலனைக் கூப்பிட்டுக் கேட்பாள். அவன் சில சடங்கு களை இயற்றி முருகனே அவள் மெலிவுக்கு காரணம் என்று கூறுவான். இது பற்றிய குறிப்புகள் பலவாகக் கிடைக்கின்றன. ஐங்குறு நூற்றில் 'வெறிபத்து' என்பது ஒரு பகுதி யாகும். வெறியை சிறப்பித்துப் பாடிய ஒரு புலவர் 'வெறிபாடிய காமக்கண்ணியார்' என்று அழைக்கப்பட்டதையும் காணலாம்.

மதுரைக்காஞ்சியில் வெறியாட்டம் பின்வரு மாறு கூறப்பட்டுள்ளது. அரிய அச்சத்தைச் செய்யும் வேலன் இடுக்கண் முருகனால் வந்ததெனக் கூறினான். தான் கூறிய அச்சொல்லின் கண்ணே கேட்போரை வளைத்துக் கொண்டு அரித்தெழும் ஓசை யையுடைய இனிய வாத்தியங்கள் ஒலிக்க, கார்காலத்து மலராகிய குறிஞ்சியைச் சூடி, கடம்பணிந்த முருகனைச் செவ்வியதாகத் தன் மெய்யின் கண் நிறுத்தி வழிபடுவான். அவ்வாறு வழிபட மகளிர் தம்முள் தழுவிக் கைகோர்த்து மன்றுகள் தோறும் நின்று குரவையாடுவர் (மதுரைக்காஞ்சி 613-617)

தலைவியின் மெல்லிய தோள் நெகிழ்விற்கு முருகனே காரணம் என்பதை,

**மென் தோள் நெகிழ்த்த செல்லல், வேலன்**
**வென்றி நெடுவேள் என்றும், அன்னையும்**
**அது என உணரும் ஆயின், ஆயிடைக்**
**கூழை இரும்பிடி கைகரந்தன்ன** -குறுந் 111

வெறியாடும்வேலன் வெள்ளியபனந்தோட் டொடு கடம்பமலரைத் தொடுத்துச் சூடிக் கொள்வான். இனிய சீர் அமைந்த தாளத்தோடு கூடிய முருகக் கடவுளின் பெரும்புகழினை கூறி ஆடுவான் என்பதை அகநானூறு 98ஆம் பாடல் விளக்கியுரைப் பதைக் காணலாம்.

## பள்ளிப்படை கோயில்கள்

பள்ளிப்படைகோயில்கள் என்பது அரசர் களின் நினைவாகவும், அரசிகளின் நினை வாகவும் எழுப்பப்பட்டது. அரசர்கள் புதைக்கப்பட்ட அல்லது எரியூட்டப்பட்ட இடத்தில் பள்ளிப்படை ஆலயங்கள் எழுப் பும் வழக்கத்தை சோழ அரசர்கள் தொட ங்கி வைத்தனர். முதலாம் ஆதித்தனின் பள்ளிப்படைக்கோயில் ஆதித்தேசுவரம் என்றும் அரிஞ்செயசோழனின் பள்ளிப் படைக்கோயில் அரிஞ்சிகை ஈசுவரம் என்றும் வழங்கப்பட்டன. அரசர்களைப் போலவே அரசியர்களுக்கும் பள்ளிப்படை கோயில்கள் எழுப்பப் பெற்றிருக்க வேண் டும். ஆண்களின் பள்ளிப்படை (சமாதி) மீது சிவலிங்கத்தைத் திருமேனி நாட்டுவது போல பெண்களின் பள்ளிப்படை (சமாதி) மீது சிவலிங்கத் திருமேனி நாட்டுவது வழக்கில்லை. எனவே அவைகள் பிற்காலப் போக்கில் ஆகம விதி ஒழுகப்பட்டு சிவன் கோயிலாகும் வாய்ப்பின்றிப் போனது என்றும், எஞ்சிய ஒரு சில பெண் அரசியர்களின் பள்ளிப்படையே இன்றைய சமயபுரம்மாரியம்மன், உறையூர் வெக்காளி யம்மன், மேல்மலையனூர் அங்காளம்மன் கோயில்கள் என்றும் பண்பாட்டு ஆய்வாளர் தொ. பரமசிவன் அவர்கள் தெய்வங்களும் பண்பாட்டு அசைவுகளும் என்ற நூலின் வழியே நிறுவியுள்ளார்.

இவ்வாறாக தமிழர்களின் தொன்மதெய்வ நம்பிக்கைகளும் வழிபாடுகளும் வழங்கி யிருந்தன. இன்று இருப்பது போல் சமயமும் தெய்வங்களும் பெரும் நிறுவனங்களாக இல்லை. இயற்கை வழிபாடும் அதனை யொட்டி முன்னோர்கள் மற்றும் இறந்தோர் களின் வழிபாடுகள் மட்டுமே தமிழர்களின் தெய்வங்களாகவும் வழிபாட்டு முறைகளாக வும் இருந்தன.